# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | EA.No.01/2023 in EP.95/2021 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | ம.சா– 02 (PW– 02 ) |
| பெயர் | :- | பொன். கணேஷ் |
| தேதி | :- | 16–09–2025 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

கோகுலம் நிதி நிறுவனம் தாக்கல்செய்த வழக்குப் பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். யார்மீது வழக்குத் தொடுத்திருந்தனர் என்று எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு வழக்குப் பற்றி எதுவுமே தெரியாது என்றால் சரியல்ல. கோகுலம் நிதி நிறுவனத்தில் தீர்ப்புக் கடனாளிகள் ஜெயா, பரமசிவம் ஆகியோர் ஏலச் சீட்டில் பணம் எடுத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. சீட்டு நிறுவன பதிவாளரிடம் கோகுலம் நிதி நிறுவனம் தீர்ப்புக் கடனாளிகள்மீது வழக்குத் தொடுத்து அளிப்பீடு பெற்ற விவரம் எனக்கும் தெரியாது. அந்த அளிப்பீட்டின் அடிப்படையில்தான் நிறைவேற்று மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

ஜெயாவையும் பரமசிவத்தையும் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன்ன இருவரில் யார் சீட்டில் சந்தாதாரராக சேர்ந்தது என்று எனக்குத் தெரியாது. எவ்வளவு சந்தாத் தொகை செலுத்தப்பட்டது? எவ்வளவு தொகை ஏலம் எடுக்கப்பட்டது? என்ற விவரம் எனக்குத்

தெரியாது. மொத்தம் எவ்வளவு தொகைக்கு அளிப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஏலம் எடுத்ததற்கு சொத்தை அடைமானம் வைத்த விவரம் தெரியாது.

யார் சார்பாக நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் கார்த்திகா சிவம் என்பவருக்காக வந்துள்ளேன். அவர் என்னிடம் கேட்ட-தால் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். சொத்து விவரம் பற்றி அவர் சொல்லிதான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல. எனக்கேத் தெரியும். கிழக்குப் பார்த்த சொத்தா? மேற்குப் பார்த்த சொத்தா? என்றால் எனக்கு திசை தெரியாது. அச் சொத்தின் பரப்பளவு 4856 சதுர அடியாகும். இந்தச் சொத்திற்கு ஆவண எண் என்ன என்றால் 2727/2011 ஆகும். அந்த ஆவணத்தையும் ஆவண எண் 2710/2011 என்ற ஆவணத்தையும் தீர்ப்புக் கடனாளிகள் அடைமானம் வைத்தனர் என்றால் அது எனக்குத் தெரியாது. அடைமான ஆவணத்தில் அந்தச் சொத்துக்கள் ஜெயாவிற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. ஜெயாவிற்கு மட்டும் சொந்தமானது என்பதால்தான் கோகுலம் நிதி நிறுவனம் ஜெயாவிற்கு ஏலம் கொடுத்தது என்றால் அது எனக்குத் தெரியாது.

தீர்ப்பாணை பெற்றவரால் பற்றுகை செய்யக் கோரப்பட்டுள்ள சொத்து ஜெயாவிற்கு மட்டுமே சொந்தமானது என்றால் சரியல்ல. இந்த வழக்கு நடவடிக்கை குறித்து எனக்கு எதுவுமே தெரியாது என்றும் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

ஜெயா இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் உயிரோடு இருந்த காலத்தில் என்ன தொழில்செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஜெயாவின் கணவர் என்ன தொழில்செய்தார் என்று எனக்குத் தெரியாது. அவர் பக்கத்து நிலத்துக்காரர். ஜெயாவையும் பரமசிவத்தையும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பரமசிவம் சொல்லிக் கொடுத்துப் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவரை 03 ஆண்டுகளுக்கு முன்னர்தான் பார்த்தேன்.

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் புனைந்து சொல்லப்பட்டவை என்றால் சரியல்ல. 2727/2011, 2710/2011 ஆவணங்கள் ஏற்பட்டபோது ஜெயா என்ன தொழில்செய்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. பத்திரம் பதிவுசெய்தபோது சார் பதிவாளர் அலுவலகத்தில் என் தகப்பனாருடன் இருந்தேன். ஜெயா சொந்தமாக தொழில்செய்துதான் சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. ஜெயாவின் மாமனார் வாங்கிக் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயாவின் மாமனார் தங்கவேல் என்ன தொழில்செய்தார் என்றால் விவசாயம், பால் மாடு வளர்ப்பு தொழில்செய்தார். தங்கவேல் பணம் கொடுத்து வாங்கியிருந்தார் அவருடைய மகன் பரமசிவம் பெயரில் வாங்கி யிருப்பார் என்றும் ஜெயா சொந்தமாக வாங்கினார் என்றும் சொன்னால் சரியல்ல. ஜெயாவும் பரமசிவமும் பணம் வாங்கிக்கொண்டு திருப்பிக் கொடுக்காததால் ஜெயாவின் கடனை அவர் சொத்திலிருந்து வசூலிக்க முடியும் என்றும் ஜெயாவின் சொத்துக்களில் மனுதாரருக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

ஜெயா வாங்கிய கடனுக்கு அவருடைய சொத்துப் பொறுப்பாகும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.